
தமிழ்நாடு
வாய்மையே வெல்லும்
தமிழ்வளர்ச்சித் துறை
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
திட்டங்களும்
செயற்பாடுகளும்
முனைவர் கோ.விசயராகவன்
இயக்குநர்
தமிழ்நாடு அரசு
2022 - 2023

தமிழ் அகராதிநாள் விருதுகள்

(ஆண்டு தோறும்)

1. வீரமாமுனிவர் விருது - 1
2. தேவநேயப் பாவாணர் விருது - 1
3. தூய தமிழ்ப் பற்றாளர் விருது - 37
   மாவட்டத்திற்கு ஒருவர்
4. நற்றமிழ்ப் பாவலர் விருது - 2
   (மரபுக்கவிதை, புதுக்கவிதை)
5. தூயதமிழ் ஊடக விருது - 2
   (காட்சி ஊடகம், அச்சு ஊடகம்)
6. சொல்லின் தாய் விருது - 37
   (மாவட்டத்திற்கு ஒரு மாணவர்)
7. தூய தமிழ்ப் பற்றாளர் பரிசு - 3

6 விருதுகள் - 80 பேருக்கு

3 பரிசுகள் - 3 பேருக்கு

அன்புடையீர் !

வணக்கம் !

சொற்குவை

இக்கையேட்டைப் படித்து முடிக்குமுன் www.sorkuvai.com என்ற வலைத்தளத்தின் பதிவுப் பக்ககத்தில், உங்கள் பெயரைப் பதிவு செய்து, 'சொற்குவை'யில் உறுப்பினராக இணையுங்கள்.

- உங்களால் உருவாக்கப்படும் தமிழ்க் கலைச்சொற்களை மின்னஞ்சல் (anjal@sorkuvai.com) வழியாக எங்களுடன் பகிருங்கள்.
- சொல் சார்ந்த ஐயங்களை வலைத்தளத்தின் முகப்புப் பக்கத்தில் தேடிக் கண்டறியலாம்.
- 14469 என்ற கட்டணமில்லா அழை எண்ணின் வழியாக எங்களிடம் தொடர்பு கொண்டு தமிழ்ச்சொல் சார்ந்த ஐயங்களுக்குத் தெளிவு பெறலாம்.
- பழமையான சொற்களின் பாதுகாப்பிற்கும் – காலத்திற்கேற்பக் கலைச்சொற்கள் உருவாக்கத்திற்குக் களமாவும், காப்பகமாகவும், கருவூலமாகவும் திகழும். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், உங்களுக்கு உதவி செய்ய காத்திருக்கிறது.

கோ.சி.அருணாச்சலம்
14/6/22

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

திட்டங்களும் செயற்பாடுகளும்

முனைவர் கோ.விசயராகவன்
இயக்குநர்

தமிழ்நாடு அரசு
2022–2023

திரு. மு.க.ஸ்டாலின்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்

திரு. தங்கம் தென்னரசு

மாண்புமிகு தொழில்துறை, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு
(ம) தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள்

திரு. மகேசன் காசிராஜன் இ.ஆ.ப.,

அரசு செயலாளர், தமிழ்வளர்ச்சி (ம) செய்தித்துறை

முனைவர் ந.அருள்

இயக்குநர், தமிழ்வளர்ச்சித் துறை

முனைவர் கோ.விசயராகவன்

இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

பதிப்புக்குழு

பதிப்பாசிரியர்கள்	தொகுப்பாளர்கள்
முனைவர் மா. பூங்குன்றன்	திரு. வே. பிரபு
திரு சு. வீரவேலு	திருமதி ஜெ. சாந்தி
முனைவர் தி. பாலசுப்பிரமணியன்	திரு. கி. இராமர்
திரு. கி. தமிழ்மணி	முனைவர் வே. கார்த்திக்
திரு. ஏ. காந்தி	திருமதி கு. சங்கீதா
உதவிப் பதிப்பாசிரியர்	திருமதி க. கஸ்தூரி
திருமதி. ஆ.மு. பிந்து	கணிப்பொறியாளர்
கண்காணிப்பாளர்	திரு. ப. தீபக்
திரு. நா. பாலகிருஷ்ணன்	கணிப்பொறியாளர்
இளநிலை உதவியாளர்	

முகவரி

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
நகர் நிருவாக அலுவலக வளாகம்,
முதல் தளம், எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.
தொலைபேசி எண். 044–29520462 / 044–29520509
கட்டணமில்லா அழை மையம் : 14469
மின்னஞ்சல் முகவரி : dtedp1974@gmail.com
வலைத்தளம் : www.sorkuvai.com

முனைவர் கோ.விசயராகவன்
இயக்குநர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்

நகர் நிருவாக அலுவலக வளாகம்,
முதல் தளம், எண். 75,
சாந்தோம் நெடுஞ்சாலை,
எம்.ஆர்.சி. நகர்,
சென்னை – 600 028.

வாழ்த்துரை

சொற்களின் வளமே மொழி வளத்தின் அளவீடு. எனவே சொற்களின் எண்ணிக்கையைக் கொண்டே மொழியின் வளத்தையும் அதன் திறத்தையும் மொழியியலார் கணக்கிடுகின்றனர். சொற்களின் எண்ணிக்கையைப் பெருக்கும் பணியை அகரமுதலித் திட்ட இயக்ககம் மேற்கொண்டு வருகிறது.

அகரமுதலி சொற்களின் பொருளை மட்டுமே கூறக்கூடியது என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. இப்போது அகரமுதலியின் பணி மிகவும் விரிந்துள்ளது. ஒரு சொல் எந்தக் காலத்தில் தோன்றியது. காலந்தொறும் என்னென்ன மாற்றங்களைப் பெற்றது. காலங்காலமாக ஒரு சொல் என்னென்ன பொருள்களை அடக்கியுள்ளது என்ற முழு விளக்கங்களையும் அகரமுதலி வெளிப்படுத்துகிறது.

அது மட்டுமல்லாது சொற்களின் சொற்பிறப்பியலையும் கூறுகிறது. சொற்பிறப்பியலைக் கூறும்போது ஒரு சொல்லின் சொல்லாக்க நெறிகள் வெளிப்படுகின்றன.

சொல்லாக்க நெறிமுறைகளைக் கொண்டுதான் புதுக்கலைச் சொற்களை உருவாக்க முடியும். ஆங்கிலத்தில் ஒரு கலைச்சொல் தோன்றி இருந்தால் அதை மொழிபெயர்ப்பது மட்டுமில்லாமல் தமிழில் கலைச்சொல்லாக வடிவமைக்க வேண்டும்.

ஒரு மொழியில் கலைச்சொற்களை உருவாக்குவதற்கு மூலமான கலைச்சொல்லின் பொருளைப் புரிந்து கொள்ளுதல், அதை மொழிபெயர்த்தல், தமிழில் அதைக் கலைச்சொல்லாக உருவாக்கல் இவ்வாறு பலப்படி அடுக்குப் பணிகள் உண்டு.

எனவே கலைச்சொற்களை உருவாக்குபவர்கள் பல கோணங்களில் திறனுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

தமிழ்மொழியின் எதிர்கால வளர்ச்சியையும், பாதுகாப்பையும் தொலைநோக்குடன் சிந்தித்து மேனாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்லாய்வுக்கென்று தனித்துவமிக்கதாகச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தை 1974–ஆம் ஆண்டு தோற்றுவித்தார்கள். எந்த நோக்கத்திற்காக இவ்வியக்ககம் தோற்றுவிக்கப்பெற்றதோ அந்நோக்கத்தை

வெற்றியடையச் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஒரு செயலியை உருவாக்கி, அதன்வழிப் பல்வேறு துறைசார்ந்த வல்லுநர் குழு அமைத்து, புதிய கலைச்சொற்களைத் திரட்டி, சொற்குவையில் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தினார்கள். அதனாற்றான் மாண்புமிகு தொழில்துறை, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு (ம) தொல்லியல்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் மாணவர்களுக்கும், உலகத் தமிழர்களுக்கும் புதிய நம்பிக்கையையும், மொழிப்பற்றையும் ஏற்படுத்தும் வண்ணம் பல செயன்மைகள் அடங்கிய அகராதியியல் சார்ந்த திட்டங்களை முன்னெடுத்துச் செய்யும்வண்ணம் அகரமுதலித் திட்ட இயக்ககத்தை நெறிப்படுத்தி வருகிறார். இயக்ககத்தின் செயன்மைகளுக்குத் தமிழ்வளர்ச்சி (ம) செய்தித்துறை அரசு செயலாளர் திரு. மகேசன் காசிராஜன் இ.ஆ.ப., அவர்கள் தொடர்ந்து ஊக்கமும், ஆக்கமும் அளித்து வருகிறார்.

தமிழ்நாட்டு அரசின் கீழ் அமைந்துள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம் தமிழில் உள்ள அனைத்துச் சொற்களுக்கும் சொற்பிறப்பியல் கண்டறிந்து 31 தொகுதிகளாக வெளியிட்டுள்ளது.

அதன்பின் பல்வேறு அகராதிகளை உருவாக்கியுள்ளது. தமிழில் உள்ள அனைத்துச் சொற்களையும் தொகுத்து சொல் வைப்பகமாக உருவாக்கி அதற்குச் சொற்குவை என்ற பெயரிட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது.

உலகெங்கும் பரவியுள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த தமிழ் எழுத்தாளர்கள், பாவலர்கள், துறை நூல்கள் எழுதுவோர் அனைவரும் இந்தச்சொற்குவை இணைய தளத்தில் நுழைந்து தங்களுக்குத் தேவையான பிறமொழி கலப்பற்ற நல்ல தமிழ்ச்சொற்களையும் தகுந்த சொற்களையும் எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இத்துறை அகரமுதலிகளை உருவாக்குவதோடு தமிழில் கலைச்சொற்கள் உருவாக்கும் பணியையும் செய்து வருகிறது. இப்பணியைப் பரவலாக்கி எதிர்கால இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுக்கத் தமிழக அரசு எண்ணியுள்ளது. அதற்காகத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கும் கலைச்சொற்கள் உருவாக்கும் பயிற்சியைச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம் அளிக்க முனைந்துள்ளது.

துறையின் தோற்றம், இதுவரை செய்த பணிகள், சொற்குவை பற்றி அறிமுகம், சொல்லாக்க நெறிமுறைகள் பற்றிய குறிப்புகள், மொழிக்கு அகரமுதலியின் தேவைகள் என அனைத்தும் கையேட்டில் இடம் பெற்றுள்ளன.

இயக்குநர்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

முகிழ்த்தலும் – மலர்தலும்

இந்திய மொழிகளில் தமிழ்மொழியில்தான் முதன்முதலில் அகராதி உருவாக்கப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகம் 1936–இல் தமிழில் பேரகராதி உருவாக்கியது.

ஒரு காலத்தில் இந்திய மொழிகள் அனைத்தும் சமற்கிருதத்தை மூலமாகக் கொண்டு அதிலிருந்துதான் உருவாயின என்று கூறப்பட்டது. இராபர்ட் கால்டுவெல் என்ற மேலைநாட்டறிஞர் வந்தபின்தான் சமற்கிருதத்திற்குத் தொடர்பே இல்லாத சில மொழிகள் ஒரு குடும்பமாக இருப்பதாகவும் அவை ஒரு மொழிக் குடும்பத்திற்குள் அடங்கும் என்றும் ஆராய்ந்து அவற்றிற்கான ஒப்பியல் இலக்கணத்தையும் உருவாக்கினார். அவர் கூறிய மொழிக்குடும்பமே தமிழை முதன்மையாகக் கொண்ட திராவிட மொழிக்குடும்பம் ஆகும். திராவிட மொழிக்குடும்பத்தில் மிகப் பழைமையான மொழியும், தொன்மையான மொழியும் தமிழ் ஆகும்.

சமற்கிருதத்தின் துணையில்லாமல் தமிழ் இயங்கக்கூடியது. மேலும் தமிழ்மொழியின் சொற்களுக்கான வேர்மூலங்களும் தமிழாகவே உள்ளன.

எனவே தமிழ் எந்த மொழியையும் சாராத தனித்தியங்கவல்ல மொழி என்று நிறுவுவதற்குத் தமிழ்ச் சொற்களின் சொற்பிறப்பியலைத் தொகுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஞானப்பிரகாசர், மாகறல் கார்த்திகேயனார் போன்றவர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் முழுவதுமாக அப்பணியைச் செய்யவில்லை.

தேவநேயப் பாவாணர் வேர்ச்சொற்கட்டுரைகள், முதல் தாய்மொழி போன்ற இது பற்றியே ஆய்வு நூல்களை வெளியிட்டார். அனைத்துத் தமிழ்மொழிச் சொற்களுக்கும் சொற்பிறப்பியல் கண்டுபிடிப்பதற்காக ஒரு துறையையே உருவாக்கித்தர வேண்டுமென்று தமிழக அரசிடம் கோரிக்கை வைத்தார். அப்போது தமிழ்ப்பணி ஆற்றிக்கொண்டிருந்த அறிஞர் பெருமக்களும் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் கருத்தையே வழிமொழிந்தார்கள்.

அக்கோரிக்கையை கனிவாக ஏற்றுக்கொண்ட அப்போதைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் எக்காலத்திலும் தனித்து இயங்கும் வகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தை தோற்றுவித்தார்கள்.

சொற்களே மொழிக்கு அடிப்படை. சொற்களைப் பாதுகாத்தால்தான் மொழியைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் முடியும். சொற்கள் பெருகப்

பெருக மொழியும் வளர்ந்து உயர்வு பெறும். காலந்தோறும் மொழியில் சில சொற்கள் பொருள் மாறுபாடு அடையும்; சில சொற்கள் வழக்கொழியும்; சில சொற்கள் புதிதாக உருவாகும். இவை அனைத்தையும் தொகுத்துப் பதிவு செய்து அகரமுதலி வடிவில் வெளியிடுவதே மொழி வளர்ச்சிக்கான ஆக்கப் பணியாக அமையும்.

அந்த வகையில், புலமையாளர்கள், பொதுமக்கள், ஆய்வறிஞர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பயன்படும் வகையில், தமிழில் சொற்பிறப்பியல் அகரமுதலிகளைத் தொகுத்து வெளியிட வேண்டுமென்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விரும்பினார்.

இதனை நடைமுறைப்படுத்த தனி இயக்ககம் இருந்தால்தான் பணி சிறப்பாக அமையும் என்று எண்ணிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் என்னும் துறைத்தலைமை அலுவலகத்தை 1974–ஆம் ஆண்டு தோற்றுவித்தார்கள்.

உலக மொழிகளில் தொன்மைமிக்கதும், இலக்கணச் செறிவுடையதும், பல்வேறு துறைகளிலும் இலக்கிய வளம் கொண்டதும், மிக விரைவாக வளர்ந்து வரும் அனைத்து அறிவியல் துறைகளுக்குமான கலைச்சொற்களைத் தன் சொல்வளத்திலிருந்தே உருவாக்கிக்கொள்ளும் வல்லமை வாய்ந்ததுமான தமிழ்மொழியில், சொல்லின் பொருளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுவதற்கு உரிய வழிகாட்டுதல் தேவையாகும்.

தமிழ்மொழியின் ஒவ்வொரு சொல்லமைப்பையும் அறிந்து சிறப்பாக வெளிப்படுத்தும் ஆற்றலைப் படைப்பாளர்களும், கல்வியாளர்களும் பெற வேண்டுமெனில், தமிழின் வேர்மூலங்களை வெளிப்படுத்தும் சொற்பிறப்பியல் அகராதி அவர்களுக்கு மிகவும் இன்றியமையாதவை.

தமிழின் சொற்களுக்குச் சொற்பிறப்பியலுடன் கலந்த பேரகரமுதலி 1974–இல் உருவாக்கத் தொடங்கி 2011–இல் 38 ஆண்டுகளில் 13,327 பக்கங்களில் 31 தொகுதிகளை உருவாக்கிப் பணியை நிறைவு செய்தது.

31 தொகுதிகளையும் சுருக்கி 1000 பக்க அளவில் சுருக்கப்பதிப்பு ஒன்றை ஒரே தொகுதியாகவும், 500 பக்க அளவில் வினைச்சொல் அகரமுதலி ஒன்றை ஒரே தொகுதியாகவும், 2016–இல் உருவாக்கியது. 1300 மூலமான சொற்களை எடுத்துக்கொண்டு அதற்கான வேர்ச்சொற்களை மட்டும் எடுத்து 'வேர்ச்சொல் சுவடி' என்ற நூலையும், நல்ல தமிழ்ச்சொற்களை 1–ஆம் வகுப்பிலிருந்து 5–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் வண்ணம் 'நற்றமிழ் அறிவோம்' என்ற நூலையும் இயக்ககம் வெளியிட்டது.

அதைத் தொடர்ந்து நடைமுறைத் தமிழ் அகரமுதலி, மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி, அயற்சொல் அகராதி, மரபுத்தொடர் அகராதி, மயங்கொலிச் சொல்லகராதி, பையடக்க அகராதி, ஒருபொருட் பன்மொழி அகராதி போன்ற பல அகராதிகளையும் வெளியிட்டு வருகிறது.

சொற்பிறப்பியல் அகரமுதலி உருவாக்கத்திற்கென்றே தொடங்கப்பட்ட அகரமுதலி இயக்ககம் அதன் பணியை நிறைவு செய்தவுடன் பல்வேறு அகரமுதலிகளையும் உருவாக்குவதுடன், கலைச்சொற்கள் உருவாக்கும் பணியையும் மேற்கொண்டது.

இதன் மூலம் சொற்குவையில் 7,58,109 (ஏழு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்று ஒன்பது) சொற்களைத் தரவேற்றம் செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வெளியிடப்பட்டுள்ளது.

அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றக் காலத்தில் அனைத்துத் துறைகளிலும் கலைச்சொற்கள் தமிழில் உருவாக்கத் தேவையுள்ளது. அந்த வகையில் உலகெங்கணும் பரவியுள்ள தமிழர்கள் அந்தந்த நாட்டிலும் பல துறைகளிலும் அறிஞர்களாகப் பணியாற்றுகின்றனர். அவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இயக்ககத்தில் உருவாக்கப்பட்ட சொற்களை "சொல் வைப்பகத்தில்" சேகரித்து வைத்துள்ளது. அதற்குச் 'சொற்குவை' என்று பெயரிடப் பெற்றது.

அதற்கென ஓர் இணையதளம் உருவாக்கப்பட்டு அது 'சொற்குவை.காம்' (sorkuvai.com) என்ற பெயரில் இயங்குகிறது. இந்த இணையதளம் வழி உலக வாழ்த்தமிழர்கள் இந்தச் சொற்களை எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

பொதுவாக, ஒவ்வொரு மொழியிலும் கல்வி நிறுவனங்களில் மட்டுமே அகராதிகள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் தமிழ்நாடு அரசு அகரமுதலிக்கென்றே ஒரு துறையைத் தொடங்கியுள்ளது. இந்தியாவில் அகரமுதலித்துறையை ஓர் அரசே உருவாக்கி இயக்கி வருவது தமிழ்நாடு அரசு மட்டுமே எனக் கருதப்படுகிறது.

தமிழ்நாட்டு அரசின் கீழ் இயங்கும் மற்ற துறை இயக்ககங்களைப் போலல்லாமல் இவ்வியக்ககம் சொல்லாராய்ச்சிப் பணிகளையே முகாமையாகச் செய்கிறது. மொழி வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் இவ்வியக்ககமே ஆணிவேராகத் திகழ்கிறது. ஒரு மொழியின் பாதுகாப்பிற்கு தனி இயக்ககம் கட்டாயம் தேவை என்றும் அவ்வியக்ககம் அரசின் நேரிடை ஆளுகைக்கும் கீழ் தனித்து இயங்கக்கூடியதாக இருந்தால் மட்டுமே இடையறாமல் செய்ய முடியும் என்பதற்கும் இவ்வியக்ககமே சான்றாக விளங்குகிறது.

அகராதிகள் ஏன்?

'அகரம்' என்பது அ என்ற எழுத்தையும், 'ஆதி' என்பது முதல் என்ற பொருளையும் குறிக்கும். எனவே தமிழில் 'அ' என்னும் எழுத்தை முதலாகக் கொண்டு சொற்களை வரிசைப்படுத்திப் பொருள் சொல்லும் நூல் (அகரம் + ஆதி = அகராதி)அகராதி என்று அழைக்கப்படுகின்றது. அகராதியானது அகரமுதலி, அகரவரிசை என்ற வேறுபெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. சொற்களின் களஞ்சியமாகவும், மொழியைக் காக்கும் கூறாகவும் அகராதி விளங்குகிறது.

நிகண்டுகளும் அகராதிகளும் :

மொழியில் ஒவ்வொரு காலத்திலும் புதிய சொற்கள் சேர்ந்து கொண்டே இருக்கும். எனவே, மொழியில் உள்ள சொற்களுக்குப் பொருள் தெரிந்துகொள்ள வேண்டிய தேவை எல்லாக் காலங்களிலும் உண்டு. தமிழில் கிடைத்துள்ள, மூவாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட நூலான தொல்காப்பியத்திலேயே அகராதிக் கூறுகள் அமைந்திருப்பதை நாம் அறிய முடிகிறது. சொல்லதிகாரத்தின் உரியியலில் 120 சொற்களுக்கும், இடையியலில் சில சொற்களுக்கும், பொருளதிகாரத்தின் மரபியலில் சில சொற்களுக்கும் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் என்னும் தொடக்கப்புள்ளியைத் தொடர்ந்து சொல்லுக்குப் பொருள் சொல்ல செய்யுள் வடிவிலான நிகண்டுகள் படைக்கப்பட்டன. சேந்தன் திவாகரம் எனப்படும் திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, கயாதர நிகண்டு, உரிச்சொல் நிகண்டு முதலிய பல நிகண்டுகள் உருவாக்கப்பட்டன. செய்யுள் வடிவிலான நிகண்டுகள் மனப்பாடம் செய்துகொள்ளும் வகையில் அமைந்திருந்தன. அக்காலத்தில் நிகண்டுகளை முழுமையாகக் கற்றவர்களே பெரும்பண்டிதர்களாக மதிக்கப்பட்டனர். இதனை, "நிகண்டு கல்லாதவன் மண்டு" என்ற பழமொழியினால் அறியலாம்.

அகராதி – பெயர் அறிமுகம் :

நிகண்டுகள் செய்யுள் வடிவில் பொருள் சொல்லிவந்த நிலையில் சொற்களை அகரவரிசையில் அமைத்துப் பொருள் சொல்லும் வகையில் 1594 ஆம் ஆண்டு சிதம்பர இரேவண சித்தர் அகராதி நிகண்டை இயற்றினார். இவரே 'அகராதி' என்ற பெயரையும் அறிமுகப் படுத்தியுள்ளார்.

‘அயல்நாட்டினரின் அகராதிக்கொடை :

நம் நாட்டிற்கு மதம் பரப்ப வந்த ஐரோப்பிய மதம் பரப்புநர்கள் மொழிப்புரிதல், கருத்துப் பரிமாற்றம் ஆகிய தேவைகளைக் கருத்தில்கொண்டு, இருமொழி, பன்மொழி அகராதிகளைப் படைத்தனர். அந்த அகராதிகள் அவர்கள் நம்மொழியைப் புரிந்துகொள்ளவும், நாம் அவர்கள் மொழியைப் புரிந்துகொள்ளவும் தொடக்கத்தில் பயன்பட்டன; அவையே இன்றும் பயன்படுகின்றன.

1679இல் ஆந்தம் தெப்ரோயன்சா என்பவர் தமிழ் – போர்ச்சுக்கீசிய அகராதியை இயற்றினார். ஃபாபிரிசியஸ் – தமிழ் – ஆங்கில அகராதியையும், இராட்லர் தமிழ்– ஆங்கில அகராதியையும், வின்சுலோ ஆங்கிலம் – தமிழ், தமிழ்–ஆங்கில அகராதிகளையும் இயற்றினார்கள். பிற்காலத்தில் தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல்லாலும் ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லாலும் பொருள் சொல்லும் அகராதிகள் பல படைக்கப்பட்டதற்கு மேற்கூறிய அகராதிகளே அடிப்படையாக அமைந்தன.

இத்தாலி நாட்டைச் சார்ந்த கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்னும் இயற்பெரைக் கொண்ட வீரமாமுனிவர் 1732 இல் பெயர், பொருள், தொடை, தொகை என்னும் நான்கு பிரிவுகளை உள்ளடக்கிய சதுரகராதியை இயற்றினார். இந்த அகராதிதான் தற்போதுள்ளவாறு அகரவரிசையில் தமிழ்ச் சொல்லுக்குத் தமிழ்ச் சொல்லாலேயே பொருள் கூறும் அகராதிகள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது. அதன் காரணமாகத்தான் வீரமாமுனிவர் "தமிழ் அகராதியியலின் தந்தை" என்று போற்றப்படுகின்றார்.

அகராதியின் தேவை :

அகராதி என்பது சொல்லுக்குப் பொருள் சொல்லும் நூல். தேவையான நேரங்களில் மட்டும் அதனை எடுத்துப் பொருள் தெரிந்துகொண்டால் போதும் என்ற தவறான எண்ணம் இன்று நம்மிடையே பலருக்கும் இருக்கின்றது. சொற்கள் இல்லாமல் மொழி இல்லை. எனவே மொழியைக் காக்க வேண்டும் என்றால் சொற்களைக் காக்க வேண்டும். அதற்கு அகராதிகள் தேவை.

தமிழ் நம் தாய்மொழி. அப்படியிருக்க தமிழ் – தமிழ் அகராதிகள் எதற்குத் தேவை என்பது பலரும் கேட்கும் கேள்வி. தமிழ் கல்வெட்டுக் காலம் தொடங்கி கணினிக்காலம் வரையிலான நீண்ட வரலாற்றைக் கொண்ட மொழி. சொல்வளம் நிறைந்த மொழி. எனவே, தமிழின் சொல்வளத்தையும் பொருள் ஆழத்தையும் அறிந்துகொள்ள தமிழ் அகராதிகள் தேவை.

சான்றாக, சொல்லுதலின் வகையைக் குறிக்க தமிழில் ஏறத்தாழ முப்பத்தொன்பது சொற்கள் உள்ளன. அவை

சொல்	சிறப்புப் பொருள்
1. அசைத்தல்	அசையழுத்தத்துடன் சொல்லுதல். அசையழுத்தம்
2. அறைதல்	அடித்து (வன்மையாய் மறுத்து)ச் சொல்லுதல்
3. இசைத்தல்	ஓசை வேறுபாட்டுடன் சொல்லுதல்
4. இயம்புதல்	இசைக்கருவி இயக்கிச் சொல்லுதல்
5. உரைத்தல்	அருஞ்சொற்களுக்கு அல்லது செய்யுள்களுக்குப் பொருள் சொல்லுதல்
6. உளறுதல்	ஒன்றிருக்க ஒன்றைச் சொல்லுதல்
7. என்னுதல்	என்று சொல்லுதல்
8. ஓதுதல்	காதிற்குள் மெல்லச் சொல்லுதல்
9. கத்துதல்	குரலெழுப்பிச் சொல்லுதல்
10. கரைதல்	அழைத்துச் சொல்லுதல்
11. கழறுதல்	கடிந்து சொல்லுதல்
12. கிளத்தல்	இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்லுதல்
13. கிளத்துதல்	குடும்ப வரலாறு சொல்லுதல்
14. குயிலுதல், குயிற்றுதல்	குயில்போல் இன்குரலிற் சொல்லுதல்
15. குழறுதல்	நாத் தளர்ந்து சொல்லுதல்
16. கூறுதல்	கூறுபடுத்திச் சொல்லுதல்
17. சாற்றுதல்	பலரறியச் சொல்லுதல்
18. செப்புதல்	வினாவிற்கு விடை சொல்லுதல்
19. நவிலுதல்	நாவினால் ஒலித்துப் பயிலுதல்
20. நுதலுதல்	ஒன்றைச் சொல்லித் தொடங்குதல்
21. நுவலுதல்	நூலின் நுண்பொருள் சொல்லுதல்
22.நொடித்தல்	கதை சொல்லுதல்
23. பகர்தல்	பண்டங்களைப் பகுத்து விலை சொல்லுதல்
24. பறைதல்	மறை (இரகசியம்) வெளிப்படுத்திச் சொல்லுதல்
25. பன்னுதல்	நிறுத்தி நிறுத்திச் சொல்லுதல்
26. பனுவுதல்	செய்யுளில் புகழ்ந்து சொல்லுதல்
27. புகலுதல்	விரும்பிச் சொல்லுதல்
28. புலம்புதல்	தனக்குத்தானே சொல்லுதல்
29. பேசுதல்	ஒருமொழியிற் சொல்லுதல்
30. பொழிதல்	இடைவிடாது சொல்லுதல்
31. மாறுதல்	உரையாட்டில் மாறிச் சொல்லுதல்

32. மிழற்றுதல் மழலைபோல் இனிமையாகச் சொல்லுதல்
33. மொழிதல் சொற்களைத் தெளிவாகப் பலுக்கிச் சொல்லுதல்
34. வலத்தல் கேட்பார் மனத்தைப் பிணிக்கச் சொல்லுதல்
35. விடுதல் மெல்ல வெளிவிட்டுச் சொல்லுதல்
36. விதத்தல் சிறப்பாய் எடுத்துச் சொல்லுதல்
37. விள்ளுதல் வெளிவிட்டுச் சொல்லுதல்
38. விளத்துதல் (விவரித்துச்) சொல்லுதல்
39. விளம்புதல் ஓர் அறிவிப்பைச் சொல்லுதல்

இதுபோல் தமிழ்மொழியில் ஒரு பொருளுக்கு நுணுக்கம் மற்றும் பொருள் வேறுபாடு கருதி பல சொற்களும் உருவாகியிருக்கின்றன. இவற்றை தமிழ்மொழியைப் பயன்படுத்துவோர் அனைவரும் அறிந்திருக்க வழியில்லை. எனவே இதைப் பொதுவாக பதிவு செய்திருந்தால் மட்டுமே அனைவரும் பயன்படுத்த முடியும். இப்பொதுப் பதிவே அகராதி ஆகும். எனவே அகராதி முகாமையான ஒரு நூல் ஆகிறது. மொழி வளர்ச்சியடைய இதன் தேவையும் அதிகமாகிறது.

காலந்தோறும் சொற்களின் பொருள் மாற்றத்தை அறிந்துகொள்ளவும் அகராதிகள் தேவை. சான்றாக, சங்க இலக்கியங்களில் நாற்றம் என்ற சொல்ல 'நறுமணம்' என்ற பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இன்று அச்சொல் 'தீமணம்' என்ற பொருளில் மட்டுமே சொல்லப்பட்டு வருகிறது. இதுபோன்ற சொல்பொருள் மாற்றங்களை உணர அகராதிகள் தேவை.

அகராதிகள் சொற்களின் பொருளை மட்டும் பதிவு செய்யாமல்,

1. சொற்களின் வகைப்பாடு
2. சொற்களின் பலுக்கல் (உச்சரிப்பு) முறை
3. தமிழில் காலந்தொறும் பொருள் மாறுபாடு
4. ஆங்கிலத்தில் இணையான பொருள்
5. இவற்றிற்கு மேற்கோள்கள்
6. (பிறமொழிகளில்) இனச்சொல்
7. சொற்பிறப்பியல்

எனப் பல கூறுகளையும் அகராதி உள்ளடக்கிப் பதிவு செய்கிறது.

சொற்களைப் பாதுகாக்கவும், அதன்மூலம் மொழியைப் பாதுகாக்கவும், தமிழின் சொல்வளம் அறியவும், மொழியின் சொல்லாழம் சொல்லவும், சொற்களின் பொருள் மாற்றத்தைப் புரிந்துகொள்ளவும், மொழியின் தொன்மையை உணர்த்தவும், அகராதிகள் காலந்தோறும் படைக்கப்பட வேண்டியது கட்டாயமாகும்.

ஒவ்வொரு மொழியிலும் அகராதிகள் உருவாக்கி அம்மொழிகளைக் காத்து நிற்பது போல் அருந்தமிழையும் அகராதிகள் காக்கின்றன.

திட்டங்களும் செயற்பாடுகளும்

வெளியீடுகள்

1.செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி. 31 தொகுதிகள்

1974–இல் தொடங்கி 2011–ல் வெளியிடப்பட்ட இவை 13,327 பக்கங்களில் 31 தொகுதிகளாக அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி திருத்தியபதிப்பு – 7 தொகுதிகள்

இவ்வியக்ககத்தின் வெளியீடுகளை (31 தொகுதி 13,327 பக்கங்கள்) காலமேம்படுத்தம் செய்து திருத்திய பதிப்பாக 7 தொகுதிகளில் அச்சுக்கு அணியமாக்கப்பட்டுள்ளன. அரசின் இசைவாணை பெறப்பட்டதும் அச்சிட்டு வெளியிடப்படும். தூய தமிழ்ச்சொற்களைத் தேர்ந்தெடுத்து, சொல் பலுக்கல் (உச்சரிப்பு), இலக்கணக்குறிப்பு, பொருளுக்கான ஆங்கில விளக்கம், வேர்ச்சொல் என அனைத்துக் குறிப்புகளுடன் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

3.செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி சுருக்கப்பதிப்பு – 2016

அனைத்து மடலங்களையும் தனியொருவர் வாங்க இயலாது என்பதாலும் அப்படியே வாங்கினாலும் அவற்றையெல்லாம் அவர் இல்லத்தில் வைத்துக்கொள்ள இயலாது என்பதைக் கருத்தில் கொண்டு அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் தெரிந் தெடுக்கப்பட்ட முகாமையான, புழக்கத்தில் உள்ள சொற்களை மட்டும் தொகுத்து ஒரே மடலமாக 884 பக்கங்களில், ஒரு தொகுதியாக வெளியிடப்பட்டுள்ளது.

4.செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி வினைச்சொல் அகரமுதலி – 2016

செந்தமிழில் உள்ள அனைத்து வினைச்சொற்களையும் ஒன்று திரட்டி, சொல் பலுக்கல், இலக்கணக்குறிப்பு, பொருள்கள், ஆங்கில விளக்கம், எடுத்துக்காட்டுகள், தமிழ் கிளைமொழிகளில் உள்ள சொல் வழக்கு என அனைத்து வகைக்குறிப்புகளுடன் இந்நூல் 408 பக்கங்கள் கொண்ட ஒரே தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

5.வேர்ச்சொல் சுவடி – 2017

புதிய கலைச்சொற்களை உருவாக்கும் ஆர்வமுள்ளவர் களுக்கு உதவும் வகையிலும், தேர்வாணையம் நடத்தும் போட்டித்

தேர்வுகளில் கலந்து கொள்ளும் தமிழ்ப்பாடத் தேர்வர்களுக்கும் பயன்படும் வண்ணம் தமிழ்வேர்ச்சொற்களைத் தொகுத்து 'வேர்ச்சொல் சுவடி' என்னும் நூல் 5000 படிகள் அச்சிடப்பட்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் அனைத்து மேல்நிலைப்பள்ளிகளுக்கும், பள்ளிக்கு ஒரு படியெனப் பள்ளிக்கல்வி இயக்ககத்தின் வழியே வழங்கப்பட்டது.

6. நற்றமிழ் அறிவோம் – 2017

தொடக்கப் பள்ளிக் குழந்தைகள் தங்கள் இல்லத்திலுள்ள பொருள்களைத் தூய தமிழில் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்ச்சொற்களைத் தொகுத்து வண்ணப்படங்களுடன் கூடிய தூய தமிழகராதி 50,000 படிகள் அச்சிட்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் அனைத்துத் தொடக்கப்பள்ளிகளுக்கும் பள்ளிக்கு ஒரு படியெனப் பள்ளிக்கல்வி இயக்ககத்தின் வழியே வழங்கப்பட்டன.

7.நடைமுறைத் தமிழ் அகரமுதலி – 2021

வாழ்வியல் நடைமுறையில் பெருமளவில் பயன்படுத்தப்படும் தமிழ்ச்சொற்களை எல்லாம் ஒருங்கே தொகுத்து அனைவருக்கும் பயன்படும் முறையில் இந்த அகரமுதலி வெளியிடப்பட்டுள்ளது.

8.மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி – 2021

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ் இலக்கியங்களில் உள்ள பழந்தமிழ்ச் சொற்களைப் பிறர் உதவியின்றித் தாங்களே படித்துப் புரிந்து நன்கு உள்விளங்கிக் கொள்ளும் வகையில் இந்த அகரமுதலி வெளியிடப்பட்டுள்ளது.

9.அயற்சொல் அகராதி – 2021

நல்ல தமிழ்ச்சொற்கள் இருக்கையில், தேவையின்றி பிறமொழிச் சொற்களை வலிந்து பேசிய சிலரால் பல அயற்சொற்கள் மக்களைத் தொற்றிக் கொண்டுள்ளன. இதனைக் களையும் வகையிலும் அயற்சொற்களுக்கான அழகு தமிழ்ச்சொற்களை நினைவூட்டும் வகையிலும் இந்த அயற்சொல் அகராதி வெளியிடப்பட்டுள்ளது.

10.மயங்கொலிச் சொல்லகராதி – 2022

தமிழ்மொழியிலுள்ள மாற்றொலியன் எழுத்துகள் (ண,ந,ன,ர,ற,ல,ள,ழ) தவறான பயன்பாட்டில் பொருள் மாற்றம் பெற்றுவிடுகின்றன. எனவே, அவற்றைத் தெளிவிக்கும் வகையில், தமிழிலுள்ள மயங்கொலிச் சொற்களைத் திரட்டி, அவற்றிற்கான பொருள் விளக்கங்களைத் தெரிவிக்கும் வகையில் இந்த அகராதி வெளியிடப்பட்டுள்ளது.

11.பையடக்க அகராதி – 2022

அனைத்துப்பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களுக்கு உடன்கணிப்பேடு (Ready Reckoner) போல பயன்படும் வகையில் இவ்வகராதி தேவையான சொற்களை எல்லாம் ஒருங்குதிரட்டி பையடக்கமாக இந்த அகராதி வெளியிடப்பட்டுள்ளது.

12.ஒருபொருட்பன்மொழி அகராதி – 2022

தமிழ்மொழியில் ஒரு பொருளைக் குறிப்பதற்குப் பல சொற்கள் அதன் நுணுக்க வேறுபாடுகளைக் கொண்டு அமைந்துள்ளன. இலக்கியங்களிலும், வாழ்முறை நடைமுறையிலும் அவை அமைந்துள்ளன. அவற்றைத் தொகுத்து அணியம் செய்யப்பட்டு இந்த ஒருபொருட்பன்மொழி அகராதி வெளியிடப்பட்டுள்ளது.

13.வட்டார வழக்குச் சொல் அகராதி

தமிழ்மொழி பேசும் பரப்பு உலகெங்கணும் பரவியுள்ளது. ஒரு கருத்திற்கு ஒவ்வொரு வட்டாரத்திலும் வெவ்வேறு சொற்கள் பயன்பாட்டிற்கு உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு வட்டாரத்தில் பேசும் சொற்கள் மற்ற வட்டார மக்களுக்குப் புரிவதில்லை. எனவே, அவற்றைத் தொகுத்து அனைவருக்கும் புரியும் வண்ணம் பொதுத் தமிழில் பொருள் எழுதி இவ்வகராதி கையேடு வெளியிடப்பட்டுள்ளது. இவ்வகராதிக்காக சென்னை, சேலம், திருச்சி, நெல்லை, மதுரை, கோவை ஆகிய 6 மண்டிலங்களுக்கும் ஒருங்கிணைப்பாளர்கள் அமர்த்தப்பட்டு சொல் தொகுப்புப் பணி நடைபெற்று வருகிறது.

14. துறைதோறும் கலைச்சொல்

(ஆட்சிச்சொல் – குறுநூல் பதிப்பு) – 2022

இன்றைக்குத் தமிழ்நாட்டு அரசுத்துறையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் தங்கள் அலுவலகப் பணிக்கான ஆங்கிலச் சொற்களுக்கு இணையான நல்ல தமிழ்க் கலைச்சொற்களைத் தொகுத்து (துறைதோறும் கலைச்சொல்) ஆட்சிச் சொல்லகராதி என்னும் தலைப்பில் ஒரு குறுநூல் உருவாக்கி வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது.

15. ஆட்சிச் சொல்லகராதி (திருந்திய பதிப்பு) – 2022

அரசுத்துறை அலுவலர்கள் அன்றாடம் பயன்படுத்தும் நிருவாக நடைமுறைத் தொடர்பிலான ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தூயதமிழ்ச் சொற்களைச் சிறந்த முறையில் உருவாக்கி ஆட்சிச் சொல்லகராதி (திருந்திய பதிப்பு) வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது.

திட்டங்கள்

16.தமிழ்க் கலைக்கழகம்

நாள்தோறும் பல்துறைச் சொற்கள் பெருகிவரும் இன்றைய காலக்கட்டத்தில் பிறமொழிச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கான தமிழ்க் கலைச்சொற்களைத் துறை வல்லுநர்களைக் கொண்டு உருவாக்கிச் செம்மைப்படுத்தி அரசின் இசைவு பெற்று வெளியிட்டு வருகிறது.

திங்களுக்கு இரண்டு வல்லுநர்க்குழுக் கூட்டங்கள் நடத்தி ஆயிரம் கலைச்சொற்களை வடிவமைக்கும் வண்ணம் திட்டமிடப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இச்சொற்கள் அடங்கிய கலைச்சொல் அகராதி விரைவில் வெளியிடப்படவுள்ளது. தற்போது 108–ஆவது கலைக்கழகக் கூட்டம் முடிவடைந்துள்ளது. இதுவரை 37,859 சொற்களுக்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 22,700 சொற்களுக்கு அரசாணை பெறப்பட்டுள்ளது.

17. 'சொற்குவை' வலைத்தளம்

sorkuvai.com என்ற வலைத்தளம் தொடங்கப்பெற்று அதில் தமிழிலுள்ள சொற்களை, அதன் பிறப்பு, வேர்ச்சொல், இலக்கிய மேற்கோளுடன் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும், அதில் இயக்கக வரலாறு, சொல்வயல் மின்னிதழ், காட்சியகம், விருதுகள், முகநூல், படவரி, வலையொளி ஆகியவை இடம் பெற்றுள்ளன. இதுவரை 7,58,109 சொற்கள் சொற்குவை வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

18. 'சொல்வயல்' மின்னிதழ் (e-Magazine)

அகராதியியல், கலைச்சொல்லாய்வு, வேர்ச்சொல்லாய்வு, மொழியியல் உள்ளிட்ட பொருண்மைகளைக் கொண்டும், இயக்கச் செயற்பாடுகளைத் தாங்கியும் 'சொல்வயல்' என்ற திங்கள் மின்னிதழ் (e-Magazine) சொற்குவையின் வலைத்தளப் பக்கத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. மின்னஞ்சல், புலனம் வழியாகவும் 'சொல்வயல்' மின்னிதழ் பயனாளர்களுக்குப் பகிரப்பட்டு வருகிறது. 2022 ஏப்ரல் வரை 23 இதழ்கள் வெளிவந்துள்ளன. அகராதியியல் செய்திகளைத் தாங்கி மின்னிதழாக இது வெளிவருகிறது.

19.அகராதியியல் விழிப்புணர்வுத் திட்டம்

கல்லூரி மாணவர்களைத் தூயதமிழ்ப் பயன்பாட்டிற்கும், புதிய கலைச்சொற்களை உருவாக்குவதற்கும் ஊக்குவிக்கும் வகையில் கல்லூரிகளில் அகராதியியல் விழிப்புணர்வுத் திட்டம் இவ்வியக்ககத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

20.கட்டணமில்லா அழை மையம் (Toll Free)

14469 கட்டணமில்லா அழை மைய எண்ணுக்கு அழைத்து எச்சொல்லுக்கும் உரிய கலைச்சொல்லைக் கேட்டறியலாம். தமிழ்மொழியின் சொல் வளத்தைக் காக்கவும், பெருக்கவும், பிறமொழிக் கலப்பைத் தவிர்க்கவும் துணை நிற்கும் வகையில் கலைச்சொற்களை உருவாக்கி, அதற்கென தனி வலைத்தளம் உருவாக்கி, பதிவேற்றம் செய்து பொதுவெளியில் பயன்பாட்டுக்கு வழங்கும் வகையில் கட்டணமில்லா அழைமையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் அதிகமாக கேட்கப்பட்ட சொற்கள் Selfi – தாமி, Whatsapp – புலனம், கட்செவி, Pendrive – பதிவுகோல், Wifi – அருகலை, Youtube – வலையொலி ஆகியனவாகும்.

21.சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித்திட்டம்

அகராதியியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கத்தின் அடுத்தக் கட்டமாக மாணவர்களிடையே சொல்லாக்கத் திறனை வளர்த்தெடுத்து, அவர்களின் தனித்தமிழ்ப் பற்றினை ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்கில் சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆண்டுதோறும் 37 மாவட்டக் கல்லூரிகளுக்கு, கல்லூரிக்கு 10 மாணவர்கள் வீதம் முதற்கட்டமாக 200 மாணவர்களுக்கு, பிரிவிற்கு 50 மாணவர்கள் வீதம் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நான்கு நாட்கள் சொல்லாக்கப் பயிலரங்கம் நடத்தப்பெறும். அவர்கள் வழியே ஏனைய கல்லூரி மாணவர்களுக்கும் சொல்லாக்கப் பயிற்சி அளிக்கப்படும். முதற்கட்டமாக 2020–21ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள 20 கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 2021–22ஆம் ஆண்டில் 3 கல்லூரி மற்றும் ஒரு பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டுள்ளது.

22. வல்லுநர்க்குழுக் கூட்டம்

ஒவ்வொரு துறையிலும் கலைச்சொற்கள் உருவாக்கப்படும்போது அச்சொற்கள் குறிப்பிட்ட ஒரு துறையினர்க்கே புரியுமாறு உள்ளன. அவை சரியான பொருள் பொதிந்துள்ளனவா என்று அந்தக் குறிப்பிட்ட துறையினரே சரிபார்க்க முடியும். இதுவரை தமிழ், மருத்துவம், ஊடகத்துறை, பலதுறைசார், கணினி, தொல்லியல்/கல்வெட்டியல்/அருங்காட்சியகம் ஆகிய துறைகளைச் சார்ந்த வல்லுநர்களால் வழங்கப்பட்ட கலைச்சொற்கள் மொத்தம் 2,114. அக்கலைச்சொற்களை அவ்வப்போது சரிபார்க்க வல்லுநர்க்குழுக் கூட்டம் நடத்தப்படுகிறது.

23. இணையவழிப் பன்னாட்டுக் கலைச்சொல்லாக்கப் பயிலரங்கம்

புறநிலையில் உள்ள பலதுறை சார்ந்த அறிஞர்களிடமிருந்து தமிழ்க் கலைச்சொற்களைப் பெற்றுச் சொற்குவை வலைத்தளத்தில் பதிவேற்றும் செய்யும் நோக்கில் 01.10.2021ஆம் நாளிலிருந்து இணையவழிப் பன்னாட்டுக் கலைச்சொல்லாக்கப் பயிலரங்கம் நடத்தப்பெற்றுவருகிறது. இதுவரையிலான 30 அமர்வுகளில், பாரிசு, நார்வே, மலேசியா, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம், ஆசுதிரேலியா, இங்கிலாந்து, செருமனி, தாய்லாந்து, மொரிசியசு, இலங்கை, நியூசிலாந்து, கொரியா, சப்பான், துபாய், ஓமன், குவைத், தைவான், பின்லாந்து, மியான்மர், அயர்லாந்து, ஆங்காங், சுவீடன், சவுதி அரேபியா, டென்மார்க் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அயலக அறிஞர்களும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தாயக அறிஞர்களும் பங்கேற்றுள்ளனர்.

22.04.2022ஆம் நாள் நடைபெற்ற 30ஆவது அமர்வு வரை 83 அயல்நாட்டறிஞர்கள், 57 உள்நாட்டு அறிஞர்கள் என மொத்தம் 140 அறிஞர்கள் பங்கேற்று 3,490 தமிழ்க் கலைச்சொற்களை வழங்கியுள்ளனர். வல்லுநர்களின் ஆய்வுக்குப்பின் அவை சொற்குவையில் பதிவேற்றம் செய்யப்பட்டுவருகின்றன.

30 அமர்வுகளில் 2,400க்கும் மேற்பட்டோர் பார்வையாளர் களாகப் பங்கேற்றும், கலைச்சொல்லாக்கங்கள் குறித்த தங்கள் கருத்துகளைத் தெரிவித்தும் பயன்பெற்றுள்ளனர். இப்பயிலரங்கில் பங்கேற்கும் அறிஞர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இயக்ககத்தின் சார்பில் மின்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

24. பன்மொழி அகராதி

தமிழைப் பிறமொழியினருக்குக் கற்பிக்கும் வகையில் மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட திராவிட மொழிகளிலும் இந்தி, ஆங்கிலம் உட்பட பிறமொழிகளிலும் பாடநூல்களும் பன்மொழி அகராதியுடன் கூடிய தமிழ் கற்பிக்கும் குறுஞ்செயலியும் உருவாக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

25. தமிழ் அகராதியியல் நாள் விழா

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஆண்டுதோறும் அகராதியியல் நாள் விழாவை நடத்த முன்வந்துள்ளது. தமிழ் அகராதியின் தந்தையான வீரமாமுனிவர் பிறந்த நாளான நவம்பர் 8ஆம் நாளை முன்னிட்டு அகராதியியல் நாள் விழா இவ்வியக்ககத்தால் கொண்டாடப்படுகிறது.

ஆண்டுக்கு ஒருமுறை நடக்கும் அந்நாள் விழாவில் வீரமாமுனிவர் விருது –1, தேவநேயப் பாவாணர் விருது –1, நற்றமிழ்ப் பாவலர் விருது –2, தூய தமிழ் ஊடக விருது –2, தூய தமிழ்ப் பற்றாளர் விருது – 37 ஆகிய 43 விருதுகளும், 3 பரிசுகளும் மாண்புமிகு அமைச்சர்களால் உரியவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

26. தமிழ் அகராதியியல் ஆய்வு மலர்

அகராதியியல் அறிஞர்கள், தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் ஆகியோரிடமிருந்து அகராதியியல், கலைச்சொல்லாக்கம், வேர்ச்சொல் ஆய்வு உள்ளிட்ட பொருண்மைகளில் கருத்து செறிவார்ந்த கட்டுரைகள் பெறப்பட்டு தமிழ் அகராதியியல் ஆய்வு மலர் 'வீரமாமுனிவர்' பிறந்த நாளான நவம்பர் 8ஆம் நாளில் வெளியிடப்பட்டு வருகிறது. இதுவரை தமிழ் அகராதியியல் ஆய்வு மலர் 2019, 2020, 2021 ஆகிய 3 மலர்கள் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் அகராதி நாள் விருதுகள்

27. வீரமாமுனிவர் விருது

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத பிறப்பால் வெளிநாட்டைச் சார்ந்த அகராதித்துறையில் சிறந்து விளங்கும் தகுதி வாய்ந்த அறிஞர் ஒருவருக்கு வீரமாமுனிவர் விருது தமிழக அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இதற்காக உரூபா 2,00,000/–மும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் விருதாளருக்கு ஆண்டுதோறும் தமிழ் அகராதியியல் நாள் விழாவில் வழங்கப்படுகிறது.

28. தேவநேயப் பாவாணர் விருது

அகராதியியலில் சிறந்து விளங்கும் தகுதி வாய்ந்த உள்நாட்டு அறிஞர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவருக்கு 'தேவநேயப் பாவாணர் விருது' தமிழக அரசால் வழங்கப்படுகிறது. இதற்கான உரூபா 2,00,000/–மும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் விருதாளருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

29. தூயதமிழ்ப் பற்றாளர் விருது

நடைமுறை வாழ்க்கையில் இயல்பாகவே தூய தமிழில் பேசும் தகுதி மிக்கவரை மாவட்டத்துக்கு ஒருவர் என்ற வகையில் 37 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு 'தூயதமிழ்ப் பற்றாளர் விருதும்', உரூபா 20,000/– பரிசுத் தொகையும், சான்றிதழும் ஆண்டுதோறும் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

சொற்குவை மாணவர்/தனித்தமிழ்ப் பற்றாளர் தன் விளக்கக் குறிப்பு

பெயர்	:	
பிறந்த நாள்	:	
முகவரி	:	
தொடர்பு எண் / புலன எண்	:	
மின்னஞ்சல் முகவரி	:	
கல்வி	:	
கல்லூரி / பணிபுரியும் இடம்	:	
sorkuvai.com வலைதளத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்த நாள்	:	

‘சொற்குவை’ திட்டத்தைப் பற்றி தங்களுடைய கருத்து :

மாணவர் / தனித்தமிழ்ப்
பற்றாளர் பெயர் :

கல்வி / கல்லூரி /
பணிபுரியும் நிறுவனம் :

தாங்கள் உருவாக்கிய கலைச்சொற்கள்
(இதற்கு முன் எந்த அகராதியிலும்
இடம் பெறாத கலைச்சொற்கள்)

ஆங்கிலம்	தமிழ்
1.	
2.	
3.	
4.	
5.	
6.	
7.	
8.	
9.	
10.	

கையொப்பம்

மாணவர் / தனித்தமிழ்ப்
பற்றாளர் பெயர் :

கல்வி / கல்லூரி /
பணிபுரியும் நிறுவனம் :

தங்களுக்கு அறிமுகமான நடைமுறை வாழ்க்கையிலும் இயல்பாகவே தூய தமிழில் பேசும் பற்றாளர்கள் ஐவர்			
வ. எண்.	பெயர்	முகவரி (ம) தொடர்பு எண்	எப்படி அறிவீர்கள்?
1.			
2.			
3.			
4.			
5.			

மாணவர் / தனித்தமிழ்ப்
பற்றாளர் பெயர் :

கல்வி / கல்லூரி /
பணிபுரியும் நிறுவனம் :

மொழிவளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் நீங்கள் கூறும் கருத்து?

30. நற்றமிழ்ப் பாவலர் விருது

பிறமொழிச் சொற்கள் கலப்பின்றி தூயதமிழ்ச் சொற்களை மட்டுமே பயன்படுத்திப் பாக்களை இயற்றும் மரபுக்கவிஞர், புதுக்கவிஞர் களிலிருந்து முறையே ஒவ்வொருவரைத் தேர்வு செய்து 'நற்றமிழ்ப் பாவலர் விருதும்' உரூபா 50,000/– பரிசுத்தொகையும், தங்கப் பதக்கத்தோடு சான்றிதழும் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

31. தூயதமிழ் ஊடக விருது

தூய தமிழ்ச்சொற்களையும், காலத்திற்கேற்ற புதிய கலைச்சொற்களையும் பயன்படுத்தி மக்களுக்குச் செய்திகளை வழங்கும் ஓர் அச்சு ஊடகத்தையும், ஒரு காட்சி ஊடகத்தையும் இவ்வியக்ககத்தின் வழியாகத் தேர்வு செய்து, 'தமிழ் அகராதியியல் நாள்' விழாவின்பொழுது தூய தமிழ் ஊடகவிருதும், விருதுத் தொகையாக ஊடகம் ஒன்றுக்கு உரூபா 50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)மும், தங்கப் பதக்கமும் மற்றும் தகுதியுரையும் வழங்கப்படுகின்றன.

32. சொல்லின் தாய் விருது

இளைஞர்களின் சொல் படைக்கும் திறனை ஊக்கப்படுத்தவும், காலத்திற்கேற்பப் புதிய சொற்களை உருவாக்கி புழக்கத்திற்குக் கொண்டு வருவதற்காகவும், தமிழின் சொல் வளத்தைப் பெருக்குவதற்காகவும் இவ்விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 37 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து 'சொல்லின் தாய்' விருதுக்கான தகுதியுரை மற்றும் விருதுத் தொகையாக ஒருவருக்கு உரூபா பத்தாயிரம் (10,000/–) வழங்கப்படுகிறது.

33. தூய தமிழில் பேசுவோருக்கும் பரிசு

நடைமுறை வாழ்க்கையில் தனித் தமிழிலேயே பேசுவோரில் தகுதி வாய்ந்த 3 தூயதமிழ்ப் பற்றாளர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் உரூபா 5,000/– பரிசுத்தொகையும், சான்றிதழும் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது.

34. மாணவர்களுக்கான கலைச்சொல் மற்றும் ஓவியப்போட்டி

தமிழ் அகராதியியல் நாளையொட்டி பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவில் கலைச்சொல்லாக்கப் போட்டியும், அகராதியியல் தொடர்பான பொருண்மையியல் சொல்–பொருள்–படம் என்ற வகையில் ஓவியப்போட்டியும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதற்பரிசாக உரூபா பத்தாயிரம் (10,000/–), இரண்டாம் பரிசாக உரூபா ஐந்தாயிரம் (5,000/–) மற்றும் பாராட்டுச் சான்றுகளும் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

2020ஆம் ஆண்டுக்கான விருது பெற்றோர் விவரம்

தேவநேயப் பாவாணர் விருது 2020 – முனைவர் கு.சிவமணி, புதுச்சேரி

வீரமாமுனிவர் விருது 2020 – முனைவர் கிரிகோரி ஜேம்சு, ஆங்காங்

தூயதமிழ்ப் பற்றாளர் விருது -2020

பெயர்	மாவட்டம்
அ.சிவபெருமான்	அரியலூர்
முனைவர் சு.சதாசிவம்	செங்கல்பட்டு
முனைவர் சி.முத்துமாலை	சென்னை
பாண்டலம் புலவர் க.குணசேகரன்	கடலூர்
த.தங்கமுத்து	தருமபுரி
முனைவர் ந.அறிவரசன்	திண்டுக்கல்
உ.கந்தசாமி	ஈரோடு
இ.நேரு	கள்ளக்குறிச்சி
பாவலர் மா.வரதராசன்	காஞ்சிபுரம்
பி.வைஷ்ணா	கன்னியாகுமரி
பாவலர் ப.எழில்வாணன்	கரூர்
முனைவர் அ.ஷர்மிளாபானு	கோவை
கருமலைத்தமிழாழன் (எ) கி.நரேந்திரன்	கிருட்டிணகிரி
வ.வரதராஜன்	மதுரை
முனைவர் ஞானம் (எ) நா.ஞானசேகரன்	மயிலாடுதுறை
கோவி. இராசேந்திரன்	நாகப்பட்டினம்
கௌதமன்நீல்ராசு	பெரம்பலூர்
முனைவர்வே.அழகுமுத்து	புதுக்கோட்டை
கவிஞர்கு.அழகர்சாமி	இராமநாதபுரம்
த.பழனி	இராணிப்பேட்டை
இர.மோகன்குமார்	சேலம்
க.ஆஷா	சிவகங்கை

தனியெழிலன் (எ) சதீஷ்	தஞ்சாவூர்
தி.இராஜபிரபா	தேனி
க.கருப்பசாமி	தென்காசி
சு.கதிர்வேல்	திருப்பத்தூர்
ச.காவியா	திருப்பூர்
மே.மு.மணிமாறன்	திருவள்ளூர்
செ.உதயணன் (எ) எழுஞாயிறு	திருவண்ணாமலை
இராம.வேல்முருகன்	திருவாரூர்
பே.இராசேந்திரன்	திருநெல்வேலி
முனைவர் தி. வெ. இராசேந்திரன்	திருச்சிராப்பள்ளி
முனைவர் தி. உமாதேவி	தூத்துக்குடி
வி.பத்மநாபன் (எ) வே.பதுமனார்	வேலூர்
செ.அழகுவேல் (எ) அழகர்	விழுப்புரம்
முத்துவிக்னேஷ்.க.	விருதுநகர்

நற்றமிழ்ப் பாவலர் விருது –2020

மரபுக்கவிதை – திரு. மறத்தமிழ் வேந்தன், சென்னை

புதுக்கவிதை – திரு. சந்திரா மனோகரன், ஈரோடு

தூயதமிழ் ஊடக விருது – 2020

காட்சி ஊடகம் – மக்கள் தொலைக்காட்சி, சென்னை

அச்சு ஊடகம் – வெல்லும் தூயதமிழ் – திங்களிதழ், புதுச்சேரி

தூயதமிழ் பற்றாளர் பரிசு

2019–2020 ஆம் ஆண்டிற்கான பரிசாளர்கள்

1. செல்வன் ச. திவாகர்
2. செல்வி கு. கயல்விழி
3. செல்வி யூ. அஸ்வத் பெனார்ஷி

2020–2021ஆம் ஆண்டிற்கான பரிசாளர்கள்

1. செல்வி த. பிரியதர்ஷினி
2. செல்வன் இர. பாலஸ்ரீகரன்
3. முனைவர் இரா. தண்டபாணி

சொல்லாக்கம் மற்றும் ஓவியப்போட்டி

சொல்லாக்கப் போட்டி பரிசாளர்கள்

2019ஆம் ஆண்டு

1. ராகுல் கண்ணா, தருமபுரி – முதலிடம்
2. மஞ்சுஸ்ரீ, திருச்சி – இரண்டாமிடம்

2020ஆம் ஆண்டு

1. ர.ஜ. ராஜஸ்ரீ, திண்டுக்கல் – முதலிடம்
2. சா. காவியா, ஈரோடு – இரண்டாமிடம்

2021ஆம் ஆண்டு

1. பா. மணிகண்டன், திருவள்ளூர் – முதலிடம்
2. பி. சங்கரகிருஷ்ணன், திருநெல்வேலி–இரண்டாமிடம்

ஓவியப் போட்டி பரிசாளர்கள்

2019ஆம் ஆண்டு

1. விஷ்ணுப்பிரியா, தேனி – முதலிடம்
2. பாலாஜி பிரசாத், சேலம் – இரண்டாமிடம்

2020ஆம் ஆண்டு

1. உ. லித்திகா வர்சு, சேலம் – முதலிடம்
2. அ. ஜூலியட் விண்ணரசி, சென்னை–இரண்டாமிடம்

2021ஆம் ஆண்டு

1. ச. இனிய உதயன், திருவாரூர் – முதலிடம்
2. ச. பூர்ணிமா, கிருஷ்ணகிரி – இரண்டாமிடம்

2021–2022–ஆம் ஆண்டு சட்டப்பேரவை அறிவிப்புகள்

♦ செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின்கீழ், புதிய கலைச்சொற்கள் உருவாக்கம், இணைய வழியில் அறிமுகம். இதற்கென ஆண்டுதோறும் ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும். (தொடர் திட்டம்)

♦ தமிழைப் பிறமொழியினருக்குக் கற்பிக்கும் வகையில் திராவிட மொழிகள் உட்பட பிறமொழிகளில் பாடநூல்களும், பன்மொழி அகராதியுடன் தமிழ் கற்பிக்கும் குறுஞ்செயலிகளும் உருவாக்கப்படும்.

♦ சொற்குவையின் சொற்கள், தமிழ் மின் நூல்கள், அரசுத் தளங்களின் உள்ளடக்கங்கள் போன்றவை படைப்பாக்கப் பொது உரிமத்தில் வெளியிடப்படும். (தொடர் திட்டம்)

♦ "ஆட்சிச்சொல் அகராதி" திருந்திய பதிப்பு இந்தாண்டு வெளியிடப்படும். மேலும், "அரசுத் துறைகளின் புதிய கலைச்சொற்களைத் தொகுத்து ஆட்சிச்சொல் குறு நூலாகத் தமிழ்வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின்போது ஆண்டுதோறும் வெளியிடப்படும்" என அறிவிக்கப்பட்டது.

2022–2023 – நிதிநிலை அறிக்கை அறிவிப்பு

◆ "தமிழ், இந்தோ – ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி" வெளியிடுதல். இதற்கென ரூபாய் 2 கோடி வழங்கப்படும்.

2022–2023–ஆம் ஆண்டு சட்டப்பேரவை அறிவிப்புகள்

◆ மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான புதிய தமிழ்க் கலைச்சொற்களை உருவாக்கம் செய்வதற்காகத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்து துறைசார் வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டு புதிய கலைச்சொல் அகராதிகள் உருவாக்கப்படும். இதற்கென ரூபாய் 35 லட்சம் வழங்கப்படும்.

◆ தமிழ் அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர்கள் உள்ளிட்ட அனைவரும் இணையதளம் மற்றும் அலைபேசி மூலம் ஆங்கிலத்திற்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களைத் தாமே உள்ளீடு செய்திடும் வகையில் "கலைச்சொல் தொகுப்பி" எனும் செயலி தமிழ்வளர்ச்சித்துறை மூலம் உருவாக்கப்படும். இதற்கென ரூபாய் 10 இலட்சம் வழங்கப்படும்.

சொற்குவைத் திட்டம்

அறிவியல் பெரிதும் வளர்ந்து கொண்டிருக்கும் இன்றைய காலத்திற்கேற்பக் கலைச்சொற்களை உருவாக்கும் திறன் பெற்ற மொழி மட்டுமே வாழும்; வளர்ச்சி பெறும். அவ்வாறு ஒரு மொழியின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் துணை செய்யும் முதன்மையான பணியை அகரமுதலி இயக்ககம் செயற்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழ்மொழியின் அனைத்துச் சொற்களையும் தொகுத்து, அச்சொற்களுக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் பொருள்விளக்கம் அளித்து, அச்சொற்களுக்கான வேர்ச்சொல் விளக்கத்தையும் வழங்கி, அரிய சொற்களுக்குப் படவிளக்கத்துடன் கூடிய செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலிகளை உருவாக்கி அச்சிட்டு நூல்களாக வெளியிட்டுள்ளது; இணையத்திலும் பதிவேற்றம் செய்துள்ளது.

தமிழ்மொழிக்குப் பெருமை சேர்ப்பது அதன் சொல்வளமே ஆகும். இன்றைய கல்விப்புலத்தில் உள்ள 600க்கும் மேற்பட்ட துறைகளில் புழங்கும் கலைச்சொற்களையெல்லாம் திரட்டி அவற்றிற்கு நிகரான தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைத்து இணைய தளத்தின் பொதுவெளியில் வெளியிடுவதும் இதுவரை தமிழில் வெளிவந்துள்ள அகராதிகளில் இடம் பெற்றுள்ள அனைத்துச் சொற்களையும் ஒன்றுதிரட்டி; அவற்றுள், வந்தசொல்லே மீளவும் வராதவகையில் (deduplication) நிரல்படுத்தி தமிழின் சொல்வளத்தை உலகறியச் செய்வதுமே 'சொற்குவைத்' திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் தொடங்கப்பெற்றுள்ள சொற்குவை.காம் (sorkuvai.com) என்ற இணையதளத்தின் வாயிலாகத் தமிழ்க் கலைச்சொல் தொடர்பான ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள வழிவகைச் செய்யப்பட்டுள்ளது. விரைவில் தொடங்கப்படவுள்ள 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லாத் தொலைபேசி வாயிலாகவும் தமிழ்க் கலைச்சொல் தொடர்பான ஐயங்களைத் தீர்த்துக்கொள்ளலாம். இச்சொற்குவைத் திட்டத்தை உலகெங்கும் உள்ள அறிஞர் பெருமக்களும், மொழியியல் ஆய்வாளர்களும் பயன்படுத்துவதன் மூலம் ஐக்கிய நாடுகளின் அமைப்பு (யுனெஸ்கோ) வெளியிட்டுள்ள மொழிவரிசைப் பட்டியலில் முதல் வரிசையில் முன்னேற்றம் காண்பதற்கான வழிவகை அமையும் என்று கருதப்படுகிறது.

•'சொற்குவைத்' திட்டத்திற்கெனத் தனி வலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழறிஞர்கள், தமிழார்வலர்கள், மாணவர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் உருவாக்கித்தரும் பல்வேறு துறைகளைச்

சார்ந்த புதிய தமிழ்க் கலைச்சொற்களை இந்த வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யலாம். அச்சொற்களைச் 'சொற்குவை' வல்லுநர்க் குழு ஆய்வு செய்து ஏற்பிசைவு வழங்கிய பின் பதிவேற்றம் செய்யப்பட்டு, பொதுவெளியில் பயன்பாட்டுக்கு வழங்கப்படவுள்ளன.

சொற்கள் ஏட்டளவிலும், இணையத்திலும் சேகரிக்கப்படுவது போதாது, அச்சொற்கள் பொதுமக்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் என்று பல நிலையிலும் சென்று சேர வேண்டுமென்பதற்காகக் கல்லூரிகள்தோறும் சொல்லாக்கப் பயிலரங்கம் விழிப்புணர்வுக்கூட்டம் நடத்தப்படுகின்றன. இவ்வியக்ககம் தன்னார்வத்துடன் அரசுக்கு எந்தவித செலவினத்தையும் ஏற்படுத்தாமல் வணிக நிறுவனங்களுடன் இணைந்து பணியாளர்கள் வழியாக வாடிக்கையாளர்களுக்குத் தூய தமிழ்ச் சொற்களைப் பரவலாக்கி வருகிறது. ஒன்றாம் வகுப்பு முதல் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்கள் வரை தனித் தமிழில் பேச விழிப்புணர்வுப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. வீடுகளில் இருக்கும்போதும் குழந்தைகள் உள்ளிட்ட குடும்பத்தாருடன் தாய்மொழியில் பேச வேண்டும் என்பதை அறிவுறுத்தி, அவர்களுக்குத் தேவையான கலைச்சொற்களை இவ்வியக்ககம் வழங்கி வருகிறது.

சொற்குவையின் முதன்மை நோக்கங்கள் :

தமிழ்மொழியின் சொல்வளத்தைக் காத்தல்
தமிழ் மொழியின் சொல்வளத்தைப் பெருக்குதல்
தமிழ்மொழியில் பிறமொழிக் கலப்பைத் தவிர்க்கத் துணை நிற்றல்

தமிழ்மொழி வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் தமிழ்நாடு அரசு செயற்படுத்திவரும் திட்டங்களை உலகிலுள்ள அனைத்துத் தர மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில் இணையம் வழியாகவும், விழிப்புணர்வுக் கூட்டங்கள் வழியாகவும் பொதுவெளிக்கு எடுத்துச் செல்வது.

***

சொல்லாக்க நெறிமுறைகள்

அறிவியல் தொழில்நுட்பத்துறையின் அளவிறந்த வளர்ச்சியின் காரணமாக ஏராளமான கலைச்சொற்கள் புதியதாக உருவாக்கப் படுகின்றன. ஆங்கிலத்தில் உருவாக்கப்படுகிற கலைச்சொற்கள் அவ்வப்போதும் உலகில் உள்ள அனைத்துப் பயன்பாட்டு மொழிகளிலும் உருவாக்கப்படுகின்றன. அவற்றை அவரவர் தாய்மொழிகளில் உருவாக்கப்படுகின்றபோது அந்தந்த மொழிகளின் சொல்லாக்க நெறிமுறைகள் அவர்களின் கலைச்சொல் உருவாக்கத்திற்குப் பயன்படுகின்றன.

தமிழில் பொதுவாக ஐந்து முறைகளில் சொல்லாக்கங்கள் உருவாக்கப்படுகின்றன.

1. பயன்பாட்டிலுள்ள பழஞ்சொற்களைப் புதுப்பித்துப் பயன்படுத்தல் (use by old words)
2. சொற்பொருளை விரிவுபடுத்திப் புதுச்சொற்களை உருவாக்கல் (extension of meaning)
3. புதுச்சொற்களை படைத்துக்கொள்ளல் (word creation)
4. மொழிபெயர்த்துக் கொள்ளல் (new words by translation)
5. கடன் பெறல் (borrowing)

1. பழஞ்சொற்களிலிருந்து புதுச்சொற்களை உருவாக்கிக் கொள்ளுதல்

இலக்கியங்களிலோ, மக்கள் வழக்கிலோ, ஓலைச்சுவடியிலோ இருந்து பழஞ்சொற்களை எடுத்துப் புதுச்சொற்களை உருவாக்கிக் கொள்ளுதல்

(எ.டு)

flask – சேமச்செப்பு

riger fever – நடுக்கக் காய்ச்சல்

medicine chest – மருந்துப் பேழை

epic – மறக்காப்பியம்

epidemic – கொள்ளைநோய்

ancient document – தொல்லாவணம்

homoeopathy – ஒல்லியல் மருத்துவம்

kick – சுள்ளாப்பு

2. சொற்பொருள் விரிவுப்படுத்தல்

சொல்லின் பொருளை சிறிது விரிவுபடுத்தி புதிய கருத்துகளுடன்

பொருத்தி புதிய சொற்களை உருவாக்கிக் கொள்ளுதல்

(எ.டு)

activate – (செயல்) செயலூக்கம்

director – (இயக்கு) இயக்குநர்

valuation – (மதிப்பு) மதிப்பீடு

decomposition – சிதைவு

3. புதுச்சொல் படைப்பு

அ) வினை + பின்னொட்டு

(எ.டு)

ஒளிர் – ஒளிர்வு வளர் – வளர்ச்சி

அதிர் – அதிர்வு அதிர் – அதிர்ச்சி

ஆ) பண்புப்பெயர் + பின்னொட்டு

(எ.டு)

உயிர் – உயிரி நிறம் – நிறமி

இ) பல்வகைப் பின்னொட்டுகள்

(எ.டு)

நடி – நடிகர் கணி – கணிப்பான்

தனி – தனிமை ஓட்டு – ஓட்டுநர்

வினை – வினைஞர் கலை – கலைஞர்

அணி – அணிதல் படி – படித்தல்

4. மொழிபெயர்த்துக்கொள்ளல்

மொழிபெயர்ப்பு

(எ.டு)

smart phone – திறன்பேசி

smart city – பொலிவுறு நகரம்

head phone – செவியொலிப்பான்

physiotheraphy – இயன்முறை மருத்துவம்

5. கடன் பெறல்

அறிவியல் அலகுகள், புதிய கண்டுபிடிப்புகள் இவற்றின் பெயர்கள் கண்டுபிடித்தவர் பெயர்களிலேயே அமைந்துள்ளன. இவ்வாறு அமைந்ததால் ஒலிபெயர்த்துப் பயன்படுத்துகிறோம்.

(எ.டு)

volt – வோல்ட் walt – வாட்

disel – டீசல் amphere – ஆம்பியர்

எடுத்துக்காட்டுக் கலைச்சொற்கள்

1.	Aerobic	–	நெஞ்சகப் பயிற்சி
2.	Agriculture drone	–	வேளாண் இறகூர்தி
3.	Airborne	–	காற்றுவழிப் பரவல்
4.	Anatomic therapy	–	உடற்கூற்று மருத்துவம்
5.	Asymptomatic	–	நோய்க்குறியிலி
6.	Bajji	–	தோய்ச்சி
7.	Ballot machine	–	ஒப்போலைப் பதிவி
8.	Balneotherapy	–	நீராட்டு மருத்துவம்
9.	Batter	–	மட்டை வீச்சாளர் / ஆடுநர்
10.	Beautician	–	ஒப்பனையாளர்
11.	Bio bubble	–	சேமச்சூழல் / சேமக்குமிழ்
12.	Bio fertilizers	–	உயிரி உரங்கள்
13.	Blue whale	–	கொலைவெறி ஆட்டம்
14.	Brand builder	–	வணிகக்குறி உருவாக்குநர்
15.	Bridger	–	செய்தித் தொடர்பாளர்
16.	Brinkmanship	–	அரசியல் நுண்ணுத்தி
17.	Buck scrapper	–	மண்வாரும் கருவி
18.	Business tycoon	–	பெருவணிகர்
19.	Buzzur	–	அழைப்பொலிப்பி
20.	Cake	–	வெட்டப்பம்
21.	Cardio walk	–	நெஞ்சக நலநடை
22.	Care taker	–	நலங்காப்பாளர்
23.	Cellfish	–	கைபேசி தொல்லையன்
24.	Childhood bilingualism	–	மழலை இருமொழியம்
25.	Chips	–	சீவரி
26.	Chronologist	–	காலக்கணிப்பாய்வாளர்
27.	Citizeness	–	குடிமகள்
28.	Citizenry	–	குடிமக்களாயம்
29.	Clamourer	–	ஆரவாரத்தன்

30.	Classical musician	–	செவ்வியல் இசைஞர்
31.	Claustrophobia	–	தனியிடப் பேரச்சம்
32.	Cock pit	–	வலவன் அறை
33.	Commission merchant	–	தரகுவணிகர்
34.	Community spread	–	குமுகப் பரவல்
35.	Computer personnel	–	கணிப்பொறிப் பணிஞர்
36.	Container lorry	–	கொள்கல ஊர்தி
37.	Cosmopolitan	–	பொது நோக்காளர்
38.	Cost of maintenance	–	பேணுகைச் செலவு
39.	Court summon	–	நயன்மன்ற அழைப்பாணை
40.	Covid curb	–	தொற்றுத்தடுப்பு
41.	Crypto currency	–	எண்மப் பணம்
42.	Crypto investors	–	எண்ம முதலீட்டாளர்
43.	Crypto tax	–	எண்மப் பணவரி
44.	Cyber bullying	–	இணைய மிரட்டல்
45.	Cyber war	–	இணையத்தாக்கு
46.	Dapok nursery	–	சுருள்பாய் நாற்றங்கால்
47.	Data Management	–	தரவு மேலாண்மை
48.	Deduplication	–	மீள்வரலகற்றம்
49.	Denialist	–	மறுப்பாளர்
50.	Desktop	–	மிசைக்கணினி
51.	Diaper	–	அணையாடை
52.	Digilocker	–	எண்மியப் பெட்டகம்
53.	Digital nomad	–	கணினி உலவுநர்
54.	Digital pedagogy	–	எண்மமுறை கற்பித்தல்
55.	Dosser	–	நெடுந்துயிலர்
56.	Drive in hotel	–	உந்து உணவகம்
57.	Droning	–	இறகூர்தி இயக்கி
58.	Droplet transmission	–	நீர்த்துளிவழிக் கடத்தல்
59.	Dutch baby	–	மென் வட்டப்பம்
60.	E-money order	–	மின் பணவிடை

61.	Epidemiologist	–	கொள்ளை நோயியல் வல்லுநர்
62.	Fancy dress	–	புனைவுரு ஆடை
63.	Furniture park	–	அறைகலன் பூங்கா
64.	Gay pride	–	பால்திரிந்தோர் மிடுக்கு
65.	Gulab jamun	–	தேங்கோளி
66.	Halwa	–	இன்களி
67.	Homoeopathy	–	ஒல்லியியல் மருத்துவம்
68.	Hyperspectral sensor	–	மீவுயர் நுண்ணுணரி
69.	Infection precaution	–	தொற்று முன்காப்பு
70.	Internet banking	–	இணைய வைப்பக முறை
71.	Joy walking	–	களி நடை
72.	Judicial act	–	நயன்முறைச் செயல்
73.	Kangaroo walk	–	பைம்மா நடை
74.	Ladoo	–	இன்னுருண்டை
75.	Lexical relation	–	சொல்லுறவு
76.	Lobbyist	–	பரப்புரையாளர்
77.	Local transmission	–	அண்மையிடக் கடத்தல்
78.	Master Chef	–	சமையல் வல்லார் / வாகை வாலுநர்
79.	Meat borne zoonosis	–	இறைச்சிவழிப் பரவும் நோய்
80.	Medi park	–	மருத்துவப் பூங்கா
81.	Media bubble	–	ஊடக ஈர்ப்புச் செய்தி
82.	Mercantilist	–	வணிகவியலர்
83.	Metro train	–	மாநகரத் தொடரி
84.	Microtarget	–	நுண்கணிப்பு
85.	Mobile food	–	இயங்கு உணவகம் / இயங்கூர்தி உணவகம்
86.	Mobile puncture	–	நடமாடும் பொள்ளை ஊர்தி
87.	Mobile tea shop	–	நடமாடும் தேநீரகம்
88.	Monochrome picture	–	ஓர்நிற ஒளிப்படம்
89.	Multi user acess	–	பல பயனர் அணுகல்
90.	Nerd	–	மிகை நுட்பர்

91.	News monger	–	செய்தி பரப்புநர்
92.	Noise suppressor	–	இரைச்சல் அடக்கி
93.	Non stop bus	–	இடைநில்லாப் பேருந்து
94.	Noodles	–	இழையுணவு
95.	Online doctor	–	இணையவழி மருத்துவர்
96.	Online registration	–	இணையவழிப் பதிவு
97.	Outdoor jacuzzi	–	திறந்தவெளி வெந்நீராடல்
98.	Outspread	–	கடும் பரவல்
99.	Palliative care	–	நோய்த்தடுப்பு மருத்துவம்
100.	Pandemic stress	–	தொற்றழுத்தம்
101.	Parched paddy	–	நெற்பொரி
102.	Patron	–	புரவலர்
103.	Pawrent	–	செல்ல விலங்காளர்
104.	Penguin walk	–	ஒயில் நடை
105.	Peppy dance	–	துள்ளல் நடனம்
106.	Personation	–	ஆள்மாறாட்டம்
107.	Pizza	–	பொதியப்பம்
108.	Planetarian	–	கோள் வாழுநர்
109.	Plasma therapy	–	ஊனீர் மருத்துவம்
110.	Pocket friendly	–	விலை குறைந்த
111.	Pockets bleed	–	கடும் விலையேற்றம்
112.	Puffs	–	திணியடை
113.	Rapid test	–	விரைவு ஆய்வு
114.	Rasagulla	–	சுவைக்கோளி
115.	Readymade dress	–	ஆயத்த ஆடை
116.	Recreator	–	மீளாக்கர்
117.	Rooftop swimming pool	–	மேற்தள நீச்சல் குளம்
118.	Samosa	–	கறிப்பொதி
119.	Sandwich	–	இடைப்பொதி
120.	Sex reassigment surgery	–	பால் மாற்றறுவை மருத்துவம்

121.	Share auto	–	பங்குத்தானி
122.	Silencer	–	ஒலி அடக்கி
123.	Sleep wear	–	துயிலாடை
124.	Solarization	–	வெயிலூட்டம்
125.	Somnambulist	–	துயில் நடையர்
126.	Special messenger	–	தனி ஏவலர்
127.	Speech bubble	–	பேச்சுப் பயிற்சி
128.	Sponge city	–	நீர்த்தேங்கா நகரம்
129.	Stand up comedian	–	தனிநிலை நகைஞன்
130.	Stand up comedy	–	தனிநிலை நகைச்சுவை
131.	Startup company	–	தொடக்கநிலை நிறுவனம்
132.	Super app	–	வண்செயலி
133.	Survivor	–	வாகையர் / வெற்றிகொண்டார்
134.	Sweater	–	குளிருடை
135.	Telegraphic message	–	தொலைவரிச் செய்தி
136.	Telephone enquiry	–	தொலைபேசி உசாவல்
137.	Teleprompter	–	ஒளிர் உரைத்திரை
138.	Tendercut	–	புதிய ஊன்/ பையூன்
139.	Textile park	–	சவளிப் பூங்கா
140.	Time loop	–	மீணிகழ்வு
141.	Twitterati	–	சுட்டுரையாளி
142.	Ultra marathon	–	நீள்நெட்டோட்டம்
143.	Unicorn company	–	மீப்பெரு முதலீட்டு நிறுவனம்
144.	Updation	–	இற்றைப்படுத்தல் / மேலாக்கம்
145.	Viral	–	மீ பரவல் / தீயாய் பரவல்
146.	Virtual fashion	–	மெய்ந்நிகர் நடப்பு
147.	Virtual private network	–	மெய்ந்நிகர் தனியர் வலைத்தளம்
148.	Webinar	–	வலையரங்கம் / மெய்ந்நிகர் அரங்கம்
149.	Yoga pavilion	–	ஓகக்கூடம்
150.	Zaftig	–	எழிலுரு

பிறமொழிச் சொல்லுக்கு நிகரான தனித்தமிழ்ச்சொற்கள்

1.	சுகாதாரம்	–	நலவாழ்வு
2.	கொரனா	–	தீநுண்மி
3.	அபராதம்	–	தண்டம் / ஒறுப்புக் கட்டணம்
4.	வருடம்	–	ஆண்டு
5.	வாக்கு	–	தேர்தல் பதிவு சீட்டு
6.	மேகம்	–	முகில்
7.	பசு	–	ஆ / மாடு
8.	காரியம்	–	கருமம் / செயல்
9.	திருப்தி	–	மனநிறைவு
10.	தினம்	–	நாள்
11.	நிவாரணம்	–	துயரழிப்பு / சமனீடு
12.	நியாயம்	–	நயன்மை
13.	விசாரணை	–	உசாவல்
14.	விவாதம்	–	தருக்கம் / ஏராணம்
15.	ஜாதகம்	–	பிறப்பியம்
16.	ஆட்டோ	–	தானி
17.	மாசம்	–	மாதம்
18.	புஷ்பம்	–	மலர் / பூ
19.	பிராண வாயு	–	உயிர்வளி
20.	நீதி	–	ஒழுக்கநெறி / முறைமை
21.	பதில் (உருது)	–	விடை
22.	தானியம்	–	தவசம்/ கூலம்
23.	தகராறு	–	வீம்பு
24.	மனிதன்/மனுசன்	–	மாந்தன்
25.	மிருகம்	–	விலங்கு
26.	முக்கியம்	–	முகமை/ சிறப்பு
27.	முகூர்த்தம்	–	முழுத்தம் / நல்லநேரம் / மணநேரம்
28.	மேகம்	–	முகில்
29.	மைதானம்	–	திறந்த வெளித்திடல்
30.	யோசனை	–	சிந்தனை / கருத்து
31.	வசனம்	–	உரையாடல் / பேச்சு
32.	வர்ணம்	–	வண்ணம் / சாதி
33.	வரதட்சணை	–	மகற்கொடை
34.	வாக்காளர்	–	தேர்தல் சீட்டாளர்
35.	வாக்குமூலம்	–	வாய்மொழிச்சான்று

பிறமொழிப் பெயர்களுக்கு நிகரான தனித்தமிழ்ப் பெயர்கள்

1. பிரியதர்ஷினி – வேள்கண்ணி
2. நித்தியஸ்ரீ – நித்திலவரசி
3. அஜித் – அழகன்
4. சுபிக்ஷா – நற்பிச்சை / பிச்சையம்மாள்
5. லோகேஷ் – உலகமுடையான் / உலக முதல்வன்
6. நடராஜன் – ஆடலரசன் / நடவரசன்
7. சுகுணா – நற்குணா / குணவழகி
8. தீபிகா – ஒளிமகள் / சுடரொளி
9. வருண் – முகிலன்
10. அனுசுயா – நல்லம்மாள்
11. காமாட்சி – எழிற்கண்ணி
12. லக்ஷ்மணா – நிறைவடிவி / வடிவு/ வடிவழகி/ வடிவுக்கரசி
13. லக்ஷ்மண் – வடிவழகன்
14. சுலோசனா – எழிற்கண்ணி / நற்கண்ணி / நக்கண்ணை
15. நித்தியா – நிலைமகள்/நிலவழகி
16. விஜயகுமாரி – வெற்றிச்செல்வி
17. சந்தியா – மாலைச்செல்வி
18. லட்சுமி – திருமகள்
19. சியாமளா – கருப்பி / நீலம்மை
20. காஞ்சனா – பொன்னி/தங்கம்/ பொன்னம்மாள்
21. மீனாட்சி – கயற்கண்ணி
22. லத்திகா – கொடிமகள் / கொடியரசி
23. சுபாஷினி – நன்மொழியாள் / நன்மொழி
24. கவிதா – இசைமொழி
25. திவ்யா – தெய்வமகள்/ நிறைமொழி
26. சரண்யா – அடியவள்/ காப்பவள்/ பணிமொழி
27. புவனேஷ் – உலகமுதல்வன்/ பூவரசன்
28. சொர்ணா – பொன்னி
29. ஜோதிகா – ஒளியவள்/ ஒளியரசி/ சுடரொளி/ சுடர்க்கொடி
30. ராமசாமி – அழகப்பன் / அழகரசன்
31. சுசீலா – நற்குணத்தி/ சீர்த்தி
32. நட்சத்திரா – மீனாள்/நாண்மீன்
33. சொர்ணலதா – பொற்கொடி
34. சுவேதா – வெள்ளையம்மாள்/ அறவரசி/ வெள்ளச்சி
35. வைஷ்ணவி – விண்ணவள்

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், சென்னை- 600 028.

விலைப்பட்டியல்

தொ. எண்	புத்தகத்தின் பெயர்	படி ஒன்றின் விலை ரூ.	கழிவு 35% ரூ.	நிகர விலை ரூ.
	செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி			
1.	இரண்டாம் மடலம் இரண்டாம் பகுதி கா–கூ	300/–	105/–	195/–
2.	இரண்டாம் மடலம் மூன்றாம் பகுதி கெ–கௌள	300/–	105/–	195/–
3.	மூன்றாம் மடலம் முதற்பகுதி ச–சா	300/–	105/–	195/–
4.	மூன்றாம் மடலம் இரண்டாம் பகுதி சி–சூ	300/–	105/–	195/–
5.	மூன்றாம் மடலம் மூன்றாம்பகுதி செ–ணௌள	300/–	105/–	195/–
6.	நான்காம் மடலம் முதற்பகுதி த–தா	300/–	105/–	195/–
7.	நான்காம் மடலம் இரண்டாம் பகுதி தி–தூ	300/–	105/–	195/–
8.	நான்காம் மடலம் மூன்றாம் பகுதி தெ–தௌள	300/–	105/–	195/–
9.	ஐந்தாம் மடலம் முதற்பகுதி ந–நா	400/–	140/–	260/–
10.	ஐந்தாம் மடலம் இரண்டாம் பகுதி நி–நீ	400/–	140/–	260/–
11.	ஐந்தாம் மடலம் மூன்றாம் பகுதி நு–நௌள	400/–	140/–	260/–
12.	ஆறாம் மடலம் மூன்றாம் பகுதி பெ–பௌள	400/–	140/–	260/–
13.	ஏழாம் மடலம் முதற்பகுதி ம–மா	400/–	140/–	260/–
14.	ஏழாம் மடலம் இரண்டாம் பகுதி மி–மூ	400/–	140/–	260/–
15.	ஏழாம் மடலம் மூன்றாம் பகுதி மெ–மௌள	400/–	140/–	260/–
16.	எட்டாம் மடலம் முதற்பகுதி ய–வ	400/–	140/–	260/–
17.	எட்டாம் மடலம் இரண்டாம் பகுதி வா–வீ	400/–	140/–	260/–
18.	எட்டாம் மடலம் மூன்றாம் பகுதி வெ–வௌள	400/–	140/–	260/–
19.	ஒன்பதாம் மடலம்– இணைப்பு மடலம் முதற்பகுதி அ–கௌள	400/–	140/–	260/–
20.	ஒன்பதாம் மடலம்– இணைப்பு மடலம் இரண்டாம் பகுதி ச–வௌள	400/–	140/–	260/–
21.	பத்தாம் மடலம் – அயற்சொல் முதற்பகுதி அ–ஔள	400/–	140/–	260/–
22.	பத்தாம் மடலம் – அயற்சொல் இரண்டாம் பகுதி க–டௌள	400/–	140/–	260/–
23.	பத்தாம் மடலம் – அயற்சொல் மூன்றாம் பகுதி த–வௌள	400/–	140/–	260/–
24.	பதினொன்றாம் மடலம் – தமிழ் அகரமுதலி வரலாறு	300/–	105/–	195/–
25.	பன்னிரண்டாம் மடலம் – தமிழ்ச் சொற்பிறப்பு நெறிமுறைகள்	400/–	140/–	260/–
26.	செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி சுருக்கப்பதிப்பு	1000/–	350/–	650/–
27.	தமிழ் வினைச்சொல் அகரமுதலி	500/–	175/–	325/–
மொத்தம்		10,600/–	3,715/–	6,890/–
(ரூபாய் ஆறாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூறு மட்டும்)				

குறிப்பு:

தொகையை ரொக்கமாக அல்லது வைப்பக வரைவோலையாக/காசோலையாக **The Director, Directorate of Tamil Etymological Dictionary Project, Chennai - 600 113.** எனும் பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் வழங்கலாம். **(Payable at Chennai)** வகையில் அல்லது மின்னணு முறையில் தீர்வு செய்யலாம் **(through ECS Payment)**

IFSC Code : IDIB000K204 Micr Code : 600019175

Account No. 759144235 (Indian Bank, Indira Nagar Branch, Chennai-20.)

துறைதோறும் துறைசார்ந்த கலைச்சொற்கள் கலந்தாய்வுக் கூட்டம்

வ.எண்	நாள்	துறையின் பெயர்	உளர்
01.	16.12.2021 -	வேளாண்மைத்துறை	- சென்னை
02.	21-12-2021 -	பொதுப்பணித்துறை நீர்வளம் (ம) கட்டடம்	- சென்னை
03.	14.03.2022 -	சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை	- சென்னை
04.	18.03.2022 -	நகராட்சி நிருவாக அலுவலகம்	- சென்னை
05.	25.03.2022 -	சென்னை குடிநீர் (ம) வடிகால் வாரியம்	- சென்னை
06.	29.04.2022 -	தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை	- சென்னை

சொற்குவை மாணவத் தூதுவர் பயிற்சித் திட்டம் ---2021----------2022

01.	30.12.2021 -	இராணிமேரி கல்லூரி	- சென்னை
02.	25.02.2022 -	மதுரை காமராசர் பல்கலைக்கழகம்	- மதுரை
03.	04.03.2022 -	இமயம் கலை (ம) அறிவியல் கல்லூரி	- வாணியம்பாடி
04.	05.03.2022 -	இசுலாமியா கல்லூரி	- வாணியம்பாடி

புதிய வெளியீடு


செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
அயற்சொல் அகராதி
முனைவர் கோ.விசயராகவன்
இயக்குநர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு
2021


செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
மாணவர் இலக்கியத் தமிழ் அகராதி
முனைவர் கோ.விசயராகவன்
இயக்குநர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு
2021

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
நடைமுறைத் தமிழ் அகராதி
முனைவர் கோ.விசயராகவன்
இயக்குநர்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடு
2021


செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
மரபுத்தொடர் அகராதி
முனைவர் கோ. விசயராகவன்
இயக்குநர்
தமிழ்நாடு அரசு
2022

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
மயங்கொலிச் சொல்லகராதி
முனைவர் கோ. விசயராகவன்
இயக்குநர்
தமிழ்நாடு அரசு
2022


செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
ஒருபொருட் பன்மொழி அகராதி
முனைவர் கோ. விசயராகவன்
இயக்குநர்
தமிழ்நாடு அரசு
2022


செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
பையடக்க அகராதி
முனைவர் கோ.விசயராகவன்
இயக்குநர்
2022


தமிழ்வளர்ச்சித் துறை
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
ஆட்சிச் சொல்லகராதி
திருந்திய பதிப்பு
ஆங்கிலம் - தமிழ்
GLOSSARY OF ADMINISTRATIVE TERMS
REVISED EDITION
(ENGLISH TAMIL)
2022

தமிழ்வளர்ச்சித் துறை
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
அகரமுதலித் திட்ட இயக்ககம்
துறைதோறும் கலைச்சொல்
(ஆட்சிச்சொல் - குறுநூல் பதிப்பு)
TECHNICAL TERMS FROM EACH AND EVERY DEPARTMENT
(ENGLISH TAMIL)
தமிழ்நாடு அரசு
2022